بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/05/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## முஃதா போர் பின்னனியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۞ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۞ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۞ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۞ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۞

முஃதா போரைப் பற்றிய குறிப்பு சென்று கொண்டிருந்தது. இதைக் குறித்து மேற்கொண்டு விபரம் இவ்வாறு வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை வழி அனுப்பி வைத்த போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் சார்பாக நினைவு வைத்துக் கொள்ளும் வகையில் எனக்கு ஏதேனும் கட்டளையிடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் நாளை எவ்வாறான நகரை சென்றடைவீர்கள் என்றால் அங்கு குறைவாகத்தான் ஸஜ்தாக்கள் செய்யப்படுகின்றன. அங்கு நீங்கள் அதிகமாக ஸஜ்தா செய்யுங்கள் என்றார்கள்.

இது மிகப்பெரும் அறிவுரையாகும். தற்காலத்தில் இங்கு நாம் வசிக்கின்ற நாடுகளிலும் இதே நிலைதான் காணப்படுகிறது. அல்லாஹ்வை மக்கள் மறந்து விட்டார்கள். இக்காலகட்டத்தில் அஹ்மதிகள் தம் இறை வணக்கங்களின் பக்கம் மிக அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

பிறகு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் மேற்கொண்டு கூறினார்கள்: அல்லாஹ்வை நினைவு கூருங்கள். இது நீங்கள் விரும்புகின்ற ஒவ்வொரு விவகாரத்திலும் உங்களுக்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கும்.

பிறகு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் செல்ல ஆரம்பித்தபோது மீண்டும் திரும்பி வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ் ஒருவனாவான்; அவன் ஒற்றைப்படையை விரும்புகிறான் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பீர்களா என்ன? இப்பொழுது நிறுத்திக் கொள்ளுங்களேன் என்று கூறியவாறு, நீங்கள் 10 நபர்களுடன் தீமை செய்துள்ளீர்கள் என்றாலும் கூட ஒருவருடன் நன்மை செய்வதை விட்டு நீங்கள் விலகிக் கொள்ளக்கூடாது என்றார்கள். அதாவது, இந்த அளவு தீமைகளுக்கு பிறகும் அல்லாஹ்வுக்காக நன்மை செய்தால், அல்லாஹ்வுடைய அச்சம் உள்ளத்தில் இருந்தால் அல்லாஹ் மன்னித்து விடுவான். நன்மை செய்யக்கூடிய மக்களை அல்லாஹ் மன்னிக்கின்றான். அவனது அருள் மிகவும் விசாலமானது. நன்மை செய்ய வேண்டும் என்பதிலும் தீமையை விட்டு விலகி இருக்க வேண்டும் என்பதிலும் இயன்ற அளவு முயற்சி செய்து கொண்டே இருங்கள் என்றார்கள். ஒவ்வொரு முறையும் 10 தீமைகள் செய்து விட்டு அதற்குப் பிறகு ஒரு நன்மை செய்ய வேண்டும் என்பது இதன் பொருள் அன்று! மாறாக, உண்மையான முறையில் பாவ மன்னிப்புக் கேட்கக் கூடியவர் அல்லாஹ்வின் அருளை பெறக்கூடியவராக ஆக வேண்டும் என்பதற்காக தீமைகளுக்கு பிறகு அந்த தீமைகளை விட்டு தப்பிப்பதற்கு

முயற்சி செய்கிறார்; நன்மை செய்கிறார். எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களிடம், நீங்கள் ஒரு நன்மை செய்வதை விட்டும் விலகி இருக்கக்கூடாது என்று கூறிய போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதற்கு பிறகு நான் எந்த கேள்வியும் கேட்க மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை வழி அனுப்பி வைத்தபோது அவர் அழ ஆரம்பித்தார். உங்களை எந்த விஷயம் அழவைக்கிறது என்று சஹாபிகள் அவரிடம் கேட்டபோது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு உலகின் மீதும் நேசம் கிடையாது; உங்கள் மீதும் நேசம் கிடையாது! ஆனால், நரகத்தைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் ஓதிய ஒரு வசனத்தை நான் கேட்டுள்ளேன். அது என்னவென்றால்,

'உங்களுள் ஒவ்வொருவரின் மீதும் அது (அதாவது, நரகம்) இறங்கும். இது உம் இறைவனின் விதிக்கப்பட்ட உறுதியான வாக்குறுதியாகும்.' (திருக்குர்ஆன் 19:72)

அது என் மீது இறங்கிய பிறகு என் நிலை எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியாது என்றார்கள். அதற்கு முஸ்லிம்கள் அவர்களுக்கு ஆறுதல் வழங்கினார்கள். அல்லாஹ் உங்களுடன் இருப்பானாக! நீங்கள் நல்லடியார்களாக எங்களிடம் திரும்பி வருவீர்கள் என்று துஆ செய்தவாறு வழியனுப்பி வைத்தார்கள்.

அந்த படையில் இருந்த அனைவரும் ஜுமுஆ நாளன்று புறப்பட்டுச் சென்று விட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களோ தாம் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஜுமுஆ தொழுது விட்டு படையினரோடு சேர்ந்து கொள்வேன் என்று கருதிக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பிறகு இவர்களைக் கண்டபோது, உங்களுடைய தோழர்களுடன் செல்ல விடாமல் உங்களை தடுத்தது எது என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், தங்களுடன் ஜுமுஆ தொழுதுவிட்டு பிறகு அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம் என்று விரும்பினேன் என்றார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பூமியில் எதுவெல்லாம் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் நீங்கள் செலவு செய்தாலும் எவர்கள் இந்த போருக்காக புறப்பட்டு விட்டார்களோ அவர்களுக்கு கிடைத்த அருளை உங்களால் பெற முடியாது என்றார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் பிரபல்யமான குதிரை வீரராக இருந்தார்கள். அவர்களும் இந்த படையில் ஒரு சாதாரண போர் வீரராக இருந்தார்கள். இந்த படை புறப்பட்டுச் சென்ற போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு மூன்று மாதங்கள்தான் ஆகியிருந்தன. முஸ்லிம்கள் மதீனாவில் இருந்து கொஞ்சம் தூரம்தான் சென்றிருப்பார்கள் இவர்கள் புறப்பட்ட செய்தி எதிரிகளுக்கு கிடைத்திருந்தது. அவர்களும் படையை ஆயத்தம் செய்ய ஆரம்பித்தனர். எதிரிகளின் எண்ணிக்கை ஒரு லட்சம் என்று முஸ்லிம்களுக்கு தெரிய வந்தபோது அதைக் குறித்து ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். சிலரோ, நாம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கடிதம் எழுதி அனைத்து செய்திகளையும் தெரிவிப்போம். அன்னார் மேற்கொண்டு படையை அனுப்பி நமக்கு உதவி செய்யலாம் அல்லது ஏதேனும் கட்டளை இடலாம். அதற்கேற்ப நாம் நடந்து கொள்ளலாம் என்றார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் முன்னேறிச் செல்லுமாறு சஹாபிகளுக்கு தைரியமூட்டினார்கள். 'என் சமுதாயமே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்த விஷயத்தை நீங்கள் இப்போது வெறுக்கிறீர்களோ அதை பெறுவதற்காகதான் நீங்கள் புறப்பட்டு வந்தீர்கள். நீங்கள் ஷஹாதத்தை பெற வேண்டும் என்று விருப்பம் கொண்டுதான் புறப்பட்டு வந்தீர்கள்..... ஆகவே, நீங்கள் முன்னேறி செல்லுங்கள். இரண்டு நன்மைகளில் ஒன்று உங்களுக்கு கிடைத்துவிடும். வெற்றி அல்லது ஷஹாதத். இந்த இரண்டு அந்தஸ்துகளும் மோசமானது ஒன்றும் கிடையாது' என்றார்கள்.

இதைக் கேட்ட முழு படையும், இப்னு ரவாஹா உண்மையை சொன்னார் என்று கூறினார்கள். பிறகு, சஹாபா பெருமக்கள் முன்னேறிச் சென்றார்கள்.

மஷாரிஃப் எனும் குடியிருப்புக்கு அருகில் அவர்கள் ஹிர்கல் (அரசன்) உடைய படையை சந்தித்தார்கள். அந்த படை ரோமானியர்கள் மற்றும் அரேபியர்களை உள்ளடக்கியதாக இருந்தது. முஸ்லிம்கள் அவர்களைக் கண்ட போது முஃதா என்றழைக்கப்பட்ட இடத்தை நோக்கி விலகி வந்து விட்டார்கள். அந்த இடத்தில் முஸ்லிம்கள் போருக்காக ஆயத்தங்களை மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் இந்த போரில் கலந்து கொண்டார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: எதிரி எங்களை நெருங்கிய போது, எந்த அளவு பெரும் எண்ணிக்கையையும், சிறந்த ஏற்பாட்டையும், ஆயுதங்களையும், குதிரைகளையும், தங்கத்தையும் அவன் வைத்திருந்தான் என்றால் நாங்கள் ஒருபோதும் அதைப்போன்ற ஒன்றை கண்டது கிடையாது. எனது கண்கள் நிலைகுத்தி நின்றன. ஹஸ்ரத் ஸாபித் பின் அக்ரம் (ரலி) அவர்கள் என்னிடம், அபூ ஹுரைராவே! நீங்கள் பெரும் படையை பார்க்கிறீர்களா என்று கேட்டார்கள். அதற்கு நான், ஆம் என்றேன். நீங்கள் எங்களுடன் பத்ர் போரில் கலந்து கொள்ளவில்லை. நாங்கள் அதிக எண்ணிக்கையின் காரணமாக அதில் வெற்றி பெறவில்லை என்றார்கள்.

போர் ஆரம்பித்தபோது மிகக்கடுமையாக சண்டை நடைபெற்றது. ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட கொடியுடன் ஜிஹாது செய்தார்கள். வீரத்துடன் போரிட்டவாறு அவர்கள் ஷஹாதத் எனும் பானத்தை அருந்தி விட்டார்கள். அதற்குப் பிறகு, ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் கொடியை பிடித்துக் கொண்டு ஜிஹாது செய்தார்கள். எந்த அளவுக்கென்றால், அவர்களும் ஷஹீதாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் தம் வலது கையில் கொடியை பிடித்திருந்தார்கள். அந்தக் கை வெட்டப்பட்டது. பிறகு, இடது கையில் பிடித்துக் கொண்டார்கள். அதுவும் வெட்டப்பட்டது. பிறகு அந்த கொடியை வெட்டப்பட்ட கைகளுடன் தம் நெஞ்சோடு சேர்த்து பிடித்துக் கொண்டார்கள். எந்த அளவுக்கென்றால், அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். அப்போது அவர்களின் வயது 33 ஆக இருந்தது. ஷஹாதத்திற்குப் பிறகு அவர்களின் உடலில் ஏறக்குறைய 60 காயங்கள் கண்டறியப்பட்டன. அதில் எந்தவொரு காயமும் முதுகில் இருக்கவில்லை; அனைத்தும் உடலின் முன் பகுதியில்தான் இருந்தது.

ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் ஷஹீதான பிறகு இஸ்லாமிய படையின் கொடியை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் பிடித்துக் கொண்டார்கள். போர் துவங்குவதற்கு முன்பு இவர்களுக்கு ஓர் இறைச்சி துண்டு கொடுக்கப்பட்டது. இதைக் கொண்டு கொஞ்சம் ஆற்றலை உருவாக்கிக் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டது. அவர்கள் அந்த இறைச்சித் துண்டை வாங்கிக் கொண்டு அதிலிருந்து கொஞ்சம் எடுக்கத்தான் செய்தார்கள் அப்போது வாள்கள் மோதிக் கொள்ளும் ஓசை கேட்டது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் தம் உள்ளத்தைப் பார்த்து, இப்போதும் கூட நீ உலகத்தில்தானே இருக்கிறாய் என்று கூறினார்கள். அதாவது, போர் ஆரம்பித்துவிட்டது; நீயோ இறைச்சியை உண்டு கொண்டிருக்கிறாய் என்று கூறிவிட்டு அந்த இறைச்சித்துண்டை எறிந்து விட்டு போரில் குதித்தார்கள். மிகவும் வீரத்துடன் போரிட்டு ஷஹீது ஆகிவிட்டார்கள். அவர்களின் கையில் இருந்து கொடி கீழே விழுந்தது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் ஷஹீதான போது முஸ்லிம்கள் முற்றிலும் துவண்டு போய் விட்டார்கள். அப்போது இரு முஸ்லிம்கள் கூட ஒன்றாக இருப்பதை காண முடியவில்லை. அப்போது அன்சாரி ஒருவர் கொடியை எடுத்து ஓடிவந்து மக்களுக்கு முன்னால் அதை நட்டு வைத்தார். மக்களே! என் பக்கம் வாருங்கள் என்று அழைத்தார். மக்கள் அவருக்கருகில் ஒன்று கூடினார்கள். ஒன்று கூடிய முஸ்லிம்களின்

எண்ணிக்கை அதிகரித்த போது அவர் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் சென்று இதை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அவரிடம், நீங்கள் அதிக தகுதியுடையவர் என்று கூறினார்கள். அப்போது அந்த அன்சாரி, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களுக்காகத்தான் இதை கொண்டு வந்தேன் என்று கூறினார்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கொடியை பிடித்த பிறகு அவர்கள் படையை ஒன்று திரட்டி எதிரியை தாக்கினார்கள். மேலும், தம் படையை ஒரு பக்கமாக விலக்கி கொண்டு வந்து விட்டார்கள். எதிரியும் அவர்களை விட்டு பின்வாங்கி விட்டான். அவர்கள் மக்களை காப்பாற்றி திரும்பக் கொண்டு வந்தார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்களைப் பொருத்தவரை, ரோமானியர்களை விட்டு விலகி வருவது என்பது உண்மையில் தப்பிப்பதாக இருந்தது. ஏனென்றால் அப்போது முஸ்லிம் படை வீரர்களின் மொத்த எண்ணிக்கை மூவாயிரமாக இருந்தது. அதில் 2000 ஐயும் விட அதிகமானவர்கள் எதிரிகளுடன் கலந்து போயிருந்தார்கள். அதாவது, இரு படைகளும் முற்றிலும் இரண்டறக் கலந்து போய் இருந்தது. எதிரியோ முஸ்லிம்களை நன்கு சுற்றி வளைத்திருந்தான். அனைத்து முஸ்லிம்களும் ஷஹீதாகக்கூடிய சாத்தியமும் இருந்தது. இவ்வாறான நிலையில் முஸ்லிம்களை காப்பாற்றி வெளியேற்றி கொண்டு வருவதே வெற்றியாக இருந்தது.

வெற்றிக்கும் பல அம்சங்கள் உள்ளன.

ஹஸ்ரத் ஸைது (ரலி), ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் இப்னு ரவாஹா (ரலி) ஆகியோர் ஷஹீதானதைக் குறித்து செய்தி கிடைப்பதற்கு முன்பே பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களுக்கு அதைக் குறித்து தெரிவித்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸைது கொடியை பிடித்தார்; அவர் ஷஹீதாகி விட்டார். பிறகு, ஜாஃபர் கொடியை வாங்கினார்; அவரும் ஷஹீதாகி விட்டார். பிறகு, இப்னு ரவாஹா கொடியை வாங்கினார்; அவரும் ஷஹீதாகி விட்டார்.

அன்னாருடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அன்னார் கூறினார்கள்: எந்த அளவுக்கென்றால், அல்லாஹ்வின் வாள்களில் ஒருவர் அந்த கொடியை வாங்கிக் கொண்டார். அவருடைய கையில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான்.

அந்நாளில் இருந்து ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஸைஃபுல்லாஹ் என்று அழைக்கப்பட்டார்கள். அதாவது அல்லாஹ்வுடைய வாள் என்று.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் இஸ்லாமிய படையின் பொறுப்பை எடுத்துக் கொண்ட பிறகு அவர்கள் படையின் முற்பகுதியைப் பிற்பகுதிக்கும், பிற்பகுதியை முற்பகுதிக்கும், வலப்பகுதியை இடப்பகுதிக்கும், இடப்பகுதியை வலப்பகுதிக்குமாக மாற்றி விட்டார்கள். அதன்பிறகு முஸ்லிம்களுக்கு மேற்கொண்டு உதவிகள் கிடைத்து விட்டனவென்று எதிரிகள் நினைக்கும் வகையில் முழக்கங்களை எழுப்பினார்கள். இதனால் அச்சமுற்ற எதிரிகள் போர்க்களத்திலிருந்து பின்வாங்கிச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் இஸ்லாமியப் படையைக் காப்பாற்றி திரும்ப அழைத்து வந்தார்கள்.

**கொடியின் கண்ணியம் மற்றும் மதிப்பைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

“ஒரு சமுதாயத்தின் மக்களுடைய உள்ளங்களில் அந்த சமுதாயத்தின் கொடியின் கண்ணியம் நிலைநாட்டப்பட்டு விடும்போது, கொடியை பாதுகாப்பதற்காக அவர்கள் தம் உயிர்களை தியாகம் செய்ய நேர்ந்தாலும் எவ்வித தயக்கமுமின்றி உயிரை தியாகம் செய்வதற்கு அவர்களை அது ஆயத்தப்படுத்தி விடுகின்றது. ஏனென்றால், அப்போது ஒரு சிறிய மரத்துண்டில் கட்டப்பட்ட, சிறிய துணியிலான கொடியைப் பற்றிய கேள்வி

கிடையாது! மாறாக, சமுதாயத்தின் கண்ணியத்தை பற்றிய கேள்வி எழுகிறது. அது உவமை ரீதியாக ஒரு கொடியின் தோற்றத்தில் அவர்களுக்கு முன்னால் இருக்கின்றது.”

**எவ்வாறிருப்பினும், இந்த குறிப்பு இனிமேலும் தொடரும். உலகின் பொதுவான சூழ்நிலைகளுக்காக தொடர்ந்து துஆக்களை செய்து வாருங்கள். குறிப்பாக, தற்போது பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுடைய சூழ்நிலைகளுக்காக துஆ செய்யுங்கள்.** அல்லாஹ் அநீதியை முடிவுக்கு கொண்டு வருவானாக! அநீதி இழைக்கப்பட்டவர்களை பாதுகாப்பானாக! அரசாங்கங்களுக்கும் அறிவை வழங்குவானாக! அவர்கள் போர்களை நோக்கி முன்னேறுவதற்கு பதிலாக சமாதானம் மற்றும் சமரசம் ஆகியவற்றால் விவகாரத்தை தீர்ப்பார்களாக! சர்வதேச ஒப்பந்தங்களை பேணக்கூடியவர்களாக இருப்பார்களாக! சர்வதேச அமைப்புகள் சார்பாகவும் தற்போது நீதி கடினமாகத்தான் கிடைக்கிறது. அந்த அமைப்புகளுக்கும் அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்குவானாக! பரஸ்பரம் இந்த நாடுகளின் விவகாரத்தை தீர்த்துக் கொள்ளும் வகையில் இரு தரப்பிலும் உள்ள அனுதாபம் கொள்ளக்கூடிய அன்பர்களுக்கும் அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்குவானாக! அல்லாஹ் இரண்டு தரப்புக்கும் அறிவை வழங்குவானாக!

போர் நிகழும் என்றால் இரண்டு பக்கமும் பாதிப்பு ஏற்படும். பிறகு, போர் வீரர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் அநீதிக்குள்ளானவர்களும் காரணமின்றி கொல்லப்படுவார்கள். இதைத்தான் நாம் தற்காலத்தில் போர்களில் பார்த்து வருகிறோம்; இதுதான் எல்லா இடங்களிலும் நிகழ்கிறது.

எவ்வாறிருப்பினும், உலகில் அநீதிக்குள்ளான அனைவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்! வெளிப்படையில் உலகம் அழிவின் விளிம்பில் நிற்கிறது. அல்லாஹ்தான் அதை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்! (மக்கள்) இறைவன் பக்கம் குனியக் கூடியவர்களாக ஆகும்போதுதான் இது சாத்தியமாகும்! அல்லாஹ் அவர்களுக்கு (இதற்கான) நல்வாய்ப்பை வழங்குவானாக! நமக்கும் துஆக்களுக்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், (பாகிஸ்தானில்) கஸூர் எனும் மாவட்டத்தில் புலைர் (Bhulair) எனும் ஊரைச் சார்ந்த ரஃபீக் அஹ்மத் சாஹிபின் மகனாகிய முஹம்மது ஆஸிஃப் சாஹிப் அவர்களின் ஷஹாதத் சம்பவத்தையும், நற்குறிப்பையும் எடுத்துரைத்து அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

ஷஹீது மர்ஹூம் அவர்களை அஹ்மதிய்யத்தின் எதிரிகள் ஏப்ரல் 24 ஆம் தேதியன்று துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கியுள்ளார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். ஷஹாதத்தின்போது மர்ஹூமுடைய வயது 19 ஆகும். மர்ஹூம் அவர்கள் நல்லடியாராகவும், கட்டுபடக்கூடியவராகவும், துணிவுமிக்கவராகவும், கிளை அமைப்புகளின் பணிகளில் பங்கெடுக்கக்கூடியவராகவும், நல்லொழுக்கமுடையவராகவும், நன்னடத்தையுடையவராகவும், கிலாஃபத்தை நேசிக்கக் கூடிய இளைஞராகவும் இருந்தார்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்துகளை உயர்த்துவானாக!

பயங்கரவாதம் செய்யக்கூடியவர்களுக்கும், ஜமாஅத்தை எதிர்க்கக் கூடியவர்களுக்கும் பாகிஸ்தானில் தைரியம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அல்லாஹ் விரைவில் அவர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَن یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)